இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் 2005 - மட்டம் 03
இறுதிப் பரீட்சை 2006
**LWU 1411 -** இலங்கைச் சட்டங்களுக்கான அறிமுகம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 21.03.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "பிரித்தானியர்கள் தமது வருகைக்கு முன்னர் நடைமுறையில் இருந்த சட்டங்கள் தொடர்பாக கையாண்ட கொள்கையானது, இலங்கையில் ரோமன் டச்சு சட்டத்தை வலுவாக தக்கவைத்துக்கொள்வதற்கு ஒரு வழிவகையை ஏற்படுத்தியது".

   பிரித்தானிய காலணித்துவ கோட்பாடுகள் மற்றும் இலங்கையில் டச்சு சட்டம் மீதான நீதிமுறை மனப்பாங்கு ஆகியவற்றுடன் தொடர்புறுத்தி இக்கூற்றை விமரிசித்து மதிப்பிடுக.

2. கண்டியில் வசித்து வரும் திலீப்ப இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு மாணவன் ஆவான். அவனுடைய தந்தை கண்டியவராவர் அவருடைய தாயார் கரையோர சிங்களவராவர். அவனுடைய தந்தை 1975ஆம் ஆண்டு பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் முடித்து கண்டியில் இருக்கும் தனது மூதாதையரின் ஆதனத்திலே வாழ்ந்து வருகின்றார். திலீப்ப, சந்ததிவழியாக வந்த கண்டியப் பெண்ணான தனது நண்பி தேவிகாவை திருமணம் செய்ய விரும்பினான். தேவிகாவுடைய தந்தை திருமணத்திற்கு சம்மதத்தை வழங்கிய போதிலும் அவர் கண்டியச்சட்டத்தின் கீழ் அத் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும் என வேண்டினார். திலீப்ப தனக்கு எந்த சட்டம் பிரயோகிக்கப்படும் எனவும் தன்னுடைய திருமணத்தை தேவிகாவுடன் கண்டியச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட முடியுமா என அறிய விரும்புகிறான்.

   (அ) திலீப்பவுக்கு ஆலோசனை வழங்குக.

   (ஆ) திலீப்பவுடைய பெற்றோர் 1950ஆம் ஆண்டு கண்டியச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

3. இராகவன் 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் விளைவாக கனடாவுக்கு இடம்பெயர்ந்த தமிழ் பெற்றோர்களின் மகன்ஆவான். 1990ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்ட பின்பு இராகவனுடைய பெற்றோர் மீண்டும் இலங்கைக்கு திரும்பி வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறினர். யாழ்ப்பாணத்தில் இருந்த பாடசாலையென்றிலே இராகவனை சேர்த்தனர். அப்போது அவனுக்கு 12 வயது ஆகும். கனடாவில் சேமித்த பணத்தைக்கொண்டு அவனுடைய பெற்றோர் யாழ்ப்பாணத்திலே வீடொன்றை நிர்மாணித்து 1996ஆம் ஆண்டு இராகவன் 18வயது அடைந்தபோது அச்சொத்தினை அவனுடைய பெயரில் கைமாற்றம் செய்தனர். இராகவன் யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலே படிப்பை முடித்து 2000ஆம் ஆண்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடமைபுரிய ஆரம்பித்தான். இராகவன் மட்டக்களப்பைச் சேர்ந்த சசிகலா என்ற தமிழ் பெண்ணை திருமணம் செய்து யாழ்ப்பாணத்தில் இருக்கும் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் அவன் தனது மனைவியையும் குழந்தையையும் பார்க்க யாழ்ப்பாணம் சென்று வந்தான். இராகவன் தனது

தனிப்பட்ட உழைப்பின் மூலம் சம்பாதித்த பெருமளவு பணத்தைக்கொண்டு மட்டக்களப்பிலே காணித்துண்டு ஒன்றை வாங்கி அங்கு தனியார் வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்தான். எவ்வாறாயினும் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம்ஒன்றின் போது இராகவன் கொல்லப்பட்டான். சசிகலா, இராவகனுக்கு எச்சட்டம் ஏற்புடையதாகும் என அறிய விரும்புகிறாள்.

சசிகலாவுக்கு ஆலோசனை வழங்குக.

4. "ஏதேனும் விடயம்... தொடர்பாக (மொகமதிய) கோவை மௌனமாக இருக்கும்போதும் அவ்விடயம் தொடர்பில் விசேட வழக்காறு ஒன்று காணப்படாதவிடத்து ஏதேனும் விசேட சட்டம் ஒன்று இல்லாத வேளைகளில் பொதுவாக பிரயோகிக்கப்படும் வகையில் உரோமன டச்சு சட்டம் கையாளப்பட வேண்டும்." - Schneider A.J in Abdul Rahiman V Ussan Umma(1916) 19 N.L.R 175 at 184)

1931ஆம் ஆண்டு மொகமதிய கோவை இல்லாது ஒழிக்கப்படும் வரை இருந்த நிலைமையை இக்கூற்று பிரதிபலிக்கின்றதா என்பதை விமர்சித்து ஆராய்க.

5 "எமது சொந்த நாகரீக வளர்ச்சியின் போது... தோன்றுகின்ற புதிய நிலைமைகளுடன் தொடர்புபட்ட சட்டக் கோட்பாடுகளை அபிவிருத்தி செய்ய உரித்துடையோர் என 'நாம், நான் நினைக்கின்றேன்' நாம் அதனை(கோட்பாட்டை) இறுக்கமான வழிகாட்டிகளை தவிர்த்து ஒப்புரவாக நிர்வகித்தல் வேண்டும்". – Bertram C.J in The Government Agent Central Province V Letchiman Chetty(1922) 24 N.L.R 36 at p .41

உரோமன் டச்சு சட்ட கோட்பாடுகளை பிரயோகிக்கும் பிணக்கு தாரர்களுடைய பிரச்சினைளுக்கு நீதிமுறை கொள்கையொன்றை கையாளுதலுடன் தொடர்புறுத்தி இக்கூற்றினை ஆராய்க.

6. இலங்கை சட்ட முறைமையிலே பன்மைத்துவம்(Pluralisim)தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்ற நிலமைகளை ஆராய்ந்து எமது சட்டமுறைமையிலே சட்ட முரண்பாட்டு நிலைமைகளை குறைத்துக்கொள்ளக் கூடிய சீர்திருத்தங்களை பிரேரணை செய்க.

7. கண்டிய இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட முன்னர் பிரயோகிக்கப்பட்ட நிறுவனங்கள் நீதி முறை அலுவலர்கள், நியாயதிக்கங்கள் என்பவற்றை விளக்குக.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு பற்றி குறிப்பு எழுதுக.

(அ) இருதாரமணம் என்ற கோட்பாடு தொடர்பாக நீதிமுறை மனப்பாங்கின் வளர்ச்சி.

(ஆ) மொகமதிய கோவை(1806) யுடைய தோற்றுவாய் மற்றும் உள்ளடக்கம்

(இ) பட்டேவியா நியதிச்சட்டம் தொடர்பான நீதிமுறை மனப்பாங்கு

(ஈ) தேச வழமை சட்டத்தின் கீழ் முன்-வாங்குரிமை.